Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 01 | [ 14 . 04 . 1993 ] | புதன்கிழமை | ஓசை 55

## வன்னிப் பகுதியில் நெல் கொள்வனவு

வன்னிப்பகுதியில் விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்ய தமிழீழ வருவாய்த் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளனர். விலைவாசி உயர்வுகளால் நுகர்வோர் பாதிப்படைவதைத் தடுக்கவும் பதுக்கல் மற்றும் கொள்ளைலாபம் போன்றவற்றைத் தடுக்கவும் விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் கொள்வனவு நிலையங்கள் வன்னிப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக நெல் மூடை ஒன்று அறுநூறு ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. தனியார் வர்த்தகர்கள் நெல்மூடை [3ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டிற்குவெளியேயும் 'புலிகளின்குரல்' கேட்கலாம்

புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சிகள் குடா நாட்டுக்கு வெளியேயுள்ள மக்களும் கேட்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புலிகளின் குரல் நிகழ்ச்சியை தினமும் காலை 7 00 மணி தொடக்கம் 8 00 மணிவரையும் இரவு 8. 00 மணி தொடக்கம் 9. 00 மணிவரையும் எவ்.எம் அலைவரிசையில் கேட்கலாம்.

## அனுமதிஅட்டை இல்லாதோர் பொலிசாரால் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் சிறிலங்கா பொலிசாரின் அனுமதி அட்டை இல்லாமல் இருப்போர் பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் திடீர் என்று கைது செய்யப்படுகின்றனர்.

வவுனியா நகரில் நுழைவோர்கள் அல்லது தங்கியிருப்போர்கள் கட்டாயம் பொலிசாரின் அனுமதி அட்டையை வைத்திருக்க வேண்டும் என்று மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் கூட இதில் விதி விலக்கல்ல என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (தி

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கு வைத்திய சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும் அவர்களுடன் கூடச் செல்பவர்களும் தங்களுக்கு இரு நாட்களுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலைக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையன்று காலை ஏழு மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண பொது வைத்திய சாலைப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சமாதானத் தீர்வு காண்பதே அவசியமான பிரச்சினை

### - பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு]

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு சமாதான தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதுவே இப்போது எமக்கு முன்பாகவுள்ள அதி அவசியமான பிரச்சினையாகும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்; இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டால் பாதுகாப்புச்செலவு குறையும் மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்திசெய்ய ... துறையிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருவதாகவும், மறுகட்டமைப்பு செய்யப்பட்ட பொருளாதாரம் பெரும் பயனைத் தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மக்கள்தான் எம்மிடமுள்ள மிகப்பெரும் சொத்து. மக்களை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்பட்ட திட்டங்களால் பெரும் லாபங்கள் கிடைத்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், மீண்டும் ஒன்றுசேரவும் நட்புறவு பந்தங்களை புதுப்பிக்கவும் இதுவே உரிய

## செஞ்சிலுவை அதிகாரி படுகொலை

# யாழ்நகரில் வெள்ளியன்று மாபெரும் கண்டன பேரணி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப-தலைவர் விமானக் குண்டுவீச்சினால் கொல்லப்பட்டமையைக் கண்டித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணியொன்று நடாத்தப்படவுள்ளது. இப் பேரணியை அரச சார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்களும், சமூக சேவை அமைப்புகளின் தொண்டர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளையின் உப தலைவர் புவனேந்திரன் விமானக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்டமையை கண்டிக்கும் இப் பேரணியின்போது யு. என். எச். சி. ஆர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், அரசாங்க அதிபர் ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை காலை 9-00 மணிக்கு நல்லூர் முன்றலில் இடம்பெறும் பேரணியில் செஞ்சிலுவைச் சங்க சாரணர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் சாரண தலைவர்கள், திரிசாரணர்கள், வழிகாட்டிகள் (பெண்சாரணீயம்) குருளைச் சாரணத் தலைவிகள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுகள், தாதிகள் பிரிவினர், றோட்டரி கழகம், லயன்ஸ் கழகம், லியோக்கழகம், இன்றட் கழகம், மற்றும் சமூகசேவை கழகங்களும், தொண்டர் தாபனங்களும் சீருடையில் கலந்து கொள்ளுமாறு அமைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

தென்மராட்சி, வடமராட்சி சமூக சேவையாளர்கட்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாண கிளையின் உபதலைவர் விமானக்குண்டு வீச்சினால் கொல்லப்பட்டமை போர்க்காலம் தொடர்பான ஜெனீவா அடிப்படைவிதிகளை மீறுவதாக இருப்பதாகவும். அதனை வன்மையாக கண்டிப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிப் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்**

## வன்னியில் சேகரிக்க

வன்னிப் பகுதி மக்களிடம் இருந்து தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் முகமான கலந்துரையாடல்கள் தற்போது நடத்தப்பட்டுவருகின்றன.

இழந்துபோன நம்தேசத்தை சிங்களப்பேரின வாதிகளிடமிருந்துமீட்டெடுத்துசுதந்திரசமதர்ம இறைமையுள்ள ஒரு இனமாக தமிழ் மக்கள் வாழ்வதற்காக நடந்துவரும் இவ் வீர விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்தும் வெற்றி நடைபோட வைப்பதற்காக தமிழீழ மக்களிடமிருந்து தமிழீழ நிதித்துறையினர் நிதியினைப் பெறுவதற்கான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் இடம்பெற்றுவருகின்றன.

## மீட்புநிதி ஏற்பாடு

இக்கலந்துரையாடல்களில் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், மனோர், துணைப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் கலந்து கொள்ளுகின்றனர். இக் கருத்துரைக் கூட்டங்களில் மண் மீட்பு நிதி சேகரிக்கப்படுவதன் நோக்கம் நிதி மீளளிப்பு செய்யப்படும்முறை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பரிணாமவளர்ச்சி, சிங்களப் பேரினவாத தலைவர்களின் நிலையும் கடந்தகால தமிழ்த் தலைமைகளின் காட்டிக் கொடுப்புகளும் விட்டுக் கொடுப்புகளும், பல் வருடங்களுக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவ நிலைகளிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நேற்று முன்தினம் இரவு பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

பலாலி முகாமிலிருந்து 8 மணியளவில் ஏவி விடப்பட்ட பல ஆட்லறி ஷெல்கள்தொண்டமனாறு, பத்தைமேனி, இடைக்காடு குடியிருப்புப் பகுதிகள் மீது விழுந்து வெடித்தன.

எனினும் அப்பகுதியில் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. [யோ]

## மன்னார் மாவட்டத்தில் புக்காரா தாக்குதல்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் பகுதியில் இருக்கும் இரட்டைக்குளம் மற்றும் கற்கடந்தகுளம் கிராமங்களில் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான புக்காரா விமானங்கள் நேற்றுக்காலை எட்டு மணியளவில் மூன்று குண்டுகளை வீசியுள்ளன.

## எல்லைக் கிராமங்களில்

களுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் யாழ்ப் ... பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சமாதானத் தீர்வு காண்பதே அவசியமான பிரச்சினை

### - பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு]

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு சமாதான தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதுவே இப்போது எமக்கு முன்பாகவுள்ள அதி அவசியமான பிரச்சினையாகும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்; இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டால் பாதுகாப்புச்செலவு குறையும் மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்திசெய்ய கூடுதல் நிதிவழங்க முடியும்.

சுபீட்சத்தின் நன்மைகளை ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் பொதுவாழ்வின் ஒவ்வொரு துறையிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருவதாகவும், மறுகட்டமைப்பு செய்யப்பட்ட பொருளாதாரம் பெரும் பயனைத் தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மக்கள்தான் எம்மிடமுள்ள மிகப்பெரும் சொத்து. மக்களை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்பட்ட திட்டங்களால் பெரும் லாபங்கள் கிடைத்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், மீண்டும் ஒன்று சேரவும் நட்புறவு பந்தங்களை புதுப்பிக்கவும் இதுவே உரிய தருணம் ஆகும் என்றும் ஐக்கியப்பட்டு செயற்பட்டால் எமது முன்னேற்றத்தை எந்த சக்தியாலும் தடுக்கமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

க்கும் இப் பேரணியின்போது யு. என். எச். சி. ஆர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், அரசாங்க அதிபர் ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப் படவுள்ளது.

இதேவேளை காலை 9-00 மணிக்கு நல்லூர் முன்றலில் இடம்பெறும் பேரணியில் செஞ்சிலுவைச் சங்க சாரணர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் சாரண தலைவர்கள், திரிசாரணர்கள், வழிகாட்டிகள் (பெண்சாரணீயம்) குருளைச் சாரணத் தலைவிகள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுகள், தாதிகள் பிரிவினர், றோட்டரி கழகம், லயன்ஸ் கழகம், லியோக்கழகம், இன்றட் கழகம், மற்றும் சமூகசேவை கழகங்களும், தொண்டர் தாபனங்களும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாண கிளையின் உபதலைவர் விமா வன்மையாக கண்டிப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்க கிளி நொச்சிப் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்**

னமாக தமிழ மக்கள் வாழ்வதற்காக நடந்துவரும் இவ் வீர விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்தும் வெற்றி நடைபோட வைப்பதற்காக தமிழீழ மக்களிடமிருந்து தமிழீழ நிதித்துறையினர் நிதியினைப் பெறுவதற்கான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் இடம்பெற்றுவருகின்றன.

மீட்பு நிதி சேகரிக்கப்படுவதன் நோக்கம் நிதி மீளளிப்பு செய்யப்படும்முறை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சி, சிங்களப் பேரினவாத தலைவர்களின் நிலையும் கடந்தகால தமிழ்த் தலைமைகளின் காட்டிக் கொடுப்புகளும் விட்டுக் கொடுப்புகளும், பல வருடங்களுக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

வாதுவ, குமாரியிலிருந்து

## பொருள்கள் உடனடியாக இறக்குதல் ஆரம்பம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்த 'வாதுவ' கப்பலில் இருந்து மண்ணெண்ணெய்பரல்கள் தபால் பொதிகள் உணவுமுத்திரைகள் ஓய்வூதிய வவுச்சர்கள் ஆகியவை கடந்தஇருதினங்களாக இறக்கப்பட்டுள்ளன. இக்கப்பலில் உள்ள மீதியான பொருள்கள் இறக்கும் வேலைகள் 25 ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும்.

அதேவேளை 'குமாரி' கப்பல் மூலம் திருக்கோணமலையிலிருந்து எடுத்துவரப்பட்ட மா மூடைகள் நாளை முதல் இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

இத்துறைமுகத்திற்கு போதிய இழுவைப் படகுகள் இல்லாததினாலேயே கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்து

(3ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகளை தாக்க வந்த கடற்படை விரட்டியடிப்பு

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கடலில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டதாக தெரியவருகின்றது. கடற்படையினர் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்த வந்தபோது புலிகள் திடீர் மின்வேக தாக்குதல்களால் கடற்படையினர் திசை தெரியாது படகை ஓட்டிசென்றதாகவும் புலிகள் விடாது தொடர்ந்தும் தாக்கியதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். எனினும் சேத விபரம் தெரியவில்லை.

இதேவேளை நேற்று முன் தினம் இரவு 11.00 மணியளவில் கிளாலி - பூநகரிப் பாதைப் பயணத்தை மேற்கொண்ட படகுகள் மீது கறுக்காய் தீவு, முனைப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். இதன்போது பயணிகளுக்கு சேதமெதுவும் ஏற்படவில்லையென அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வேளை தீவுப் பகுதியிலிருந்து பரா வெளிச்சமும் பாய்ச்சப் பட்டது.

(11),(86)

## மன்னார் மாவட்டத்தில் புக்காரா தாக்குதல்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தின் முருங்கன் பகுதியில் இருக்கும் இரட்டைக்குளம் மற்றும் கற்கடந்தகுளம் கிராமங்களில் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான புக்காரா விமானங்கள் நேற்றுக்காலை எட்டு மணியளவில் மூன்று குண்டுகளை வீசியுள்ளன.

## எல்லைக் கிராமங்களில் இராணுவ கெடுபிடி

[வவுனியா]

வவுனியா எல்லைப்புற தமிழ்க் கிராமங்களில் சிறிலங்கா இராணுவத்தின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

பாவற்குளம், செட்டிகுளம் பகுதிகளிலும் வேறு சில பகுதிகளிலும் இராணுவம் ஊடுருவி தமிழ்ப் பொதுமக்கள் மீதான கெடுபிடிகளை நடாத்தி வருகிறது.

மேற்படி இராணுவத்துடன் தமிழ்க் குழுக்களும் ஈடுபட்டுள்ளன.

இராணுவத்தின் இந் நடவடிக்கையினால் அப்பாவிப் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். (தி)

## தமிழ் இளைஞர் விமான நிலையத்தில் கைது

ஜப்பான் நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இணுவிலைச் சேர்ந்த செல்வரட்ணம் சதீஸ்குமார் கட்டுநாயக்க விமானநிலையத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஜப்பான் நாட்டிற்கு செல்லுபடியாகாத கடவுச்சீட்டு ஒன்றுடன் சென்றதாகவும்அதனாலேயேதிருப்பி அனுப்பப்பட்டதாகவும் கூறப்பட்டபோதும்நீர்கொழும்புபொலிஸ் சுப்றீண்டன்டன்டக்ளஸ் பீரிஸ் இவருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே தொடர்பு இருக்கலாம் எனக் கருதுவதாக கூறியுள்ளார்.

## தடுப்பு முகாமிலுள்ளோர் கடிதங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

களுத்துறை தடுப்பு முகாமில் உள்ள தமிழ் கைதிகள் தமது பெற்றோர். உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களை யாழ். அரச அதிபர் செயலகத்திற்கு எடுத்து வந்துள்ளார்.

மேற்படி முகாமில் உள்ள கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் நேரில் யாழ். செயலகத்திற்கு நாளைவியாழக்கிழமை வந்து தம்மிடம் அக் கடிதங்களை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். [சி]

## அன்னை பூபதி நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு நாளை யாழ். இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் புத்தூர் மாவீரர் மண்டபத்திலும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த உண்ணாவிரத நிகழ்வு காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை இடம்பெறும்.

இதேவேளை நாளை சிரமதானப்பணிமூலம் உடுப்பிட்டி இமையாணன் கிழக்கு சலாம் வீதி, சண்டிலிப்பாய்- மானிப்பாய் மாவீரர் கலையரங்கு வீதி, உயரப்புலம் பாரதி வீதி என்பன புனரமைக்கப்படுவதுடன் சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை, லெப்.கேணல் பொன்னம்மான் சிறுவர் பாடசாலை, மானிப்பாய் புலவர் முகாம் என்பன துப்புரவு செய்யப்படும். இதனை அரசியல்துறை யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

## இராணுவப் பிடிக்குள் 150 பொதுமக்கள்

(வடமராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சிக்கி இன்னமும் இளவாலையில் சுமார் 150 பேரளவில் இருப்பதாகவும் இவர்கள் கடும் நோய்களுக்கு இலக்காகி தகுந்த வைத்திய வசதிகள் இன்றி அவஸ்தைப் படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் அதிகமானோர் வயோதிபர்கள் என்றும் முக்கிய அத்தியாவசிய மருந்துகள் சுகாதார ஏற்பாடுகள் எதுவும் இல்லாத நிலையில் படுக்கை நோயாளிகளாக மாறிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நோயின் வேதனை தாங்க முடியாது துடிக்கும் வயோதிப நோயாளிகள் யாழ். வந்து தக்க மருத்துவத்தை பெற்றுக் கொள்ள படையினரிடம் அனுமதி கேட்டும், படையினரால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இவ் வகையான நோயாளிகளை யாழ். வரவழைத்து உடன் தக்க மருத்துவ வசதிகளை ஏற்படுத்த முற்படாவிட்டால் இவர்களுக்கு ஏற்படும் ஆபத்தை தவிர்க்க முடியாமல் போய்விடுமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## இல. வங்கி கிளைகள் இன்று திறந்திருக்கும்

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக் கிளை புத்தாண்டு தினத்தைமுன்னிட்டு காலை ஒன்பது மணி முதல் பதினொரு மணிவரை கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கால நேரத்தில் வைப்பிலிடும் வாடிக்கையாளர்களுக்கு கைவிசேடமும் வழங்கப்பட இருப்பதாகவும் வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதேவேளை மானிப்பாய் கிளையினர் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் விசேட கருமபீடம் ஒன்றை இன்று காலை ஒன்பது மணிக்கு திறந்து வைக்கவுள்ளனர். பிராந்திய முகாமையாளர் கணேசமூர்த்தி பிரதம விருந்திரைாகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றித்திறந்துவைக்கும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு வங்கி நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## திருக்கோணமலையில் பெண்மணி ஒருவர் கைது

திருக்கோணமலை மாவட்டத்தில் இருக்கும் கட்டைபறிச்சான் பகுதியிலிருந்து மூதூருக்கு சென்று கொண்டிருந்த பெண்மணி ஒருவரை ஜி.பி.எஸ். முகாமில் இருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். இச் சம்பவத்தில் கட்டைபறிச்சான் கிராமம் ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய் குணபூசணம் தெய்வானைப் பிள்ளை [வயது 40] என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

## பொறியியல்முறை அனுமதி இம்மாதத்திற்குள் திருத்தம்

(கொழும்பு)

1991ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கு செல்லத்தகுதி பெற்ற மாணவர்கள் இந்த ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்க முடியும் என்றும் 1992 ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அடுத்த ஆண்டு பல்கலைக்கழகம் செல்ல ஒழுங்குகள் செய்யப்படுகின்றன என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பதில் தலைவர் பேராசிரியர் ஐ. பாலசூரிய தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் பொறியியல் பீடத்தில் அனுமதிப்பதற்கான முறையில் இம் மாதத்திற்குள் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும், 91 - 92ஆண்டுகளில் பரீட்சையில் சித்திபெற்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தேவை

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-6322)

நல்ல நிலையிலுள்ள 6' × 3' இரும்பு அலுமாரிகள் உடன் தேவை நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: சங்கிலியன் விறகுகாலை 639, பருத்தித்துறைவீதி, முத்திரைச்சந்தி நல்லூர். (4668)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிகவிரைவில் நல்ல முறையில் மலிவாகச் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (4660)

### மகாதேவா ஜோதிடம்

புதிய செய்திகளுடனும் உங்கள் இராசிப் பலன்களுடனும் ஸ்ரீமுகவருஷம் இதழ் எங்கும் விற்பனையாகின்றது. சோதிடரை, 140, செல்லர் வீதி, கல்வியங்காடு, நல்லூரில் சந்திக்கலாம். [4678]

### கிரிக்கெற் போட்டி

இன்று புத்தாண்டு தினத்தை முன்னிட்டு 10மணி பளவில் கரணவாய் உச்சில் அம்பாள் ஆலய முன் மைதானத்தில் கரணவாய் கிழக்கு வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கிழக்கு திரு வீடியோ சென்ரர் விளையாடும் என்பதை அறியத்தருகின்றோம். (3425)

### சோதிடம்

உங்கள் எதிர் காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தியுங்கள். சோதிட வானில் இருபது ஆண்டுகளாக நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் வேலணைசோதிடர் V.A.சிவராசா, 152B அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4679)

### செவ்வாய் மாற்றம்

[112 நாட்களின் பின் இன்று செவ்வாய் மாற்றம்] புதுவருஷ, கைவிசேஷம், சத்தியாவின கைரேகை சாஸ்திரம் எல்லா ராசிகளின் பலன்கள் ரூ. 8.50 எங்கும் கிடைக்கும். கனகா ரேட்ஸ் திருநெல்வேலிச்சந்தி. [4682]

---

வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள்

அனைவருக்கும்

சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்கின்றோம்!

1962ஆம் ஆண்டு ஸ்தாபித்த எமது நிறுவனம்
30 வருட சேவையில் இன்றும்!

## மொறாயஸ்

(வெலிங்டன் முன்பாக)
50, மணிக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:

கமிஷன் அடிப்படையில் இயங்கும் சில கிளினிக்குகளில் இருந்து யாருடைய சிபார்சும் இன்றி கண் வைத்திய நிபுணர்களின் (PRESCRIPTION) சிட்டையின் படி உங்கள் முக அமைப்புக்கேற்ப மூக்குக் கண்ணாடிகளைத் தாமதம் இன்றியும், சரியாகவும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

**மொறாயஸ்**
பல்கட்டுபவர்களும்

[சி/6414)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



## வெற்றிவேலாயுதம் ஜீவராணி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18-08-1970 | 14-04-1992 |

ஓடியது ஓராண்டு
ஓயவில்லை உன் நினைவு—நீ
நாடியது விண்ணுறக்கம்
நமக்கில்லை கண்ணுறக்கம்

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. [3422]

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

---

## 8-ம் ஆண்டு நினைவு

---

லெப். கேணல் சந்தோசம் வீதி, அரியாலை
அக்கினி வைரவர் ஆலய புனருத்தாரண நிதிக்காக

## ராஜன்ஸ் குழுவினரின் "இசைமாலை"

காலம் : 24-4-1993 அன்று
சனிக்கிழமை
இடம் : ஆலய முன்றல்


ஆலய நிர்வாகி

(சி/6413)

---

நான்காம் ஆண்டு

## நினைவலைகள்



## மேஜர் சுபாஸ்

[புண்ணியமூர்த்தி உதயகுமார்]

| வீர உதயம்: | வீர அஸ்தமனம்: |
|---|---|
| 03-03-1965 | 14-04-1989 |

விரைந்தோடும் காலக்கடலில்
கரைந்தோடின நான்காண்டுகள்
அஞ்சாத துணிவு உனதாகும்
ஆறாத நீளதுயர் எமதாகும்
பாசமுள்ள மலர்கள் விரைவில் வாடிவிடும்
பாசமுள்ள நல்லவர் நெடுநாள் வாழ்வதில்லை

15-04-1993 நாளை எமது வீட்டில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்,
சகோதரர்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (4680

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



---

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும்

**எமது புதுவருட நல்வாழ்த்து!!**

உங்கள் ஜவுளி தேவைகளை, நிதான விலையில்,
மன நிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடுமிடம்

## குட்லக் எம்போறியம்

பிடவை மாளிகை,
பிரதான வீதி, பருத்தித்துறை.

கிளை— **ஆனைமுகன் பிடவை மாளிகை**
நெல்லியடி, கரவெட்டி.

(சி-6416)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-14

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழகம் நோக்கிச் செல்லும் வழியில் தமிழீழக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

லெப். தவேந்திரன் [அமிர்தலிங்கம் சுந்தரகுமார்-லிங்கநகர்-திருமலை]

சுசி [சுப்பிரமணியம் சபேஸ்வரன் -8ம் வட்டாரம், சாம்பல்தீவு-திருமலை]

சுனில் [சேவியர் கெனடி - 8ம் வட்டாரம், சாம்பல்தீவு திருமலை]

நேரு [மயில்வாகனம்- 8ம் வட்டாரம், சாம்பல்தீவு, திருமலை]

ரமணன் [மூத்து சிவபாலன்-தாமரைக்குளம், அடம்பன் மன்னார்]

செல்வம் [பிலிப்பு பெனடிக்ற்-ஆட்காட்டிவெளி, அடம்பன்-மன்னார்

லிங்கராசா (சத்தியாஸ் எலியாஸ்-குமானயங்குளம் அடம்பன்-மன்னார்)

நடேஸ்மாமா (முத்தையா நடராசா-பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

கணேஸ்மாமா (கந்தசாமி கணேசமூர்த்தி - மூர்த்தி வீதி பொலிகண்டி கிழக்கு,-வல்வெட்டித்துறை)

சுதா (முத்துச்சாமி சுதாகர்-பொலிகண்டிகுடியேற்றம்-வல்வெட்டித்துறை)

கமல் (அர்ச்சுனராசா நந்தகுமார்-பொலிகண்டி, ஒடக்கன்ர-பருத்தித்துறை)

திலீபன் (பொன்னுத்துரை யோகசிங்கம்-வசந்தகிரி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, யாழ்]

தம்பி (வேலுப்பிள்ளை இராசகோபால்-முரளிவீதி, ஆவரங்கால், புத்தூர்-யாழ்)

சண் (தவசி சற்குணராசா-சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி-யாழ்)

1988 ஆம் ஆண்டு கருவேலங்கண்டலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

ராதா (வேலுப்பிள்ளை சிவானந்தன்- பட்டிக்குடியிருப்பு கருவேலங்கண்டல், ஒட்டிசுட்டான்)

யோ சென்ரர் விளையாடும் என்பதை அறியத் தருகின்றோம். (ப425)

## சோதிடம்

உங்கள் எதிர் காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தியுங்கள். சோதிட வானில் இருபது ஆண்டுகளாக நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் வேலணைசோதிடர் V.A. சிவராசா, 152B அரசடி றோட் கந்தர் மடம், யாழ்ப்பாணம். (4679)

## செவ்வாய் மாற்றம்

[112 நாட்களின் பின் இன்று செவ்வாய் மாற்றம்] புதுவருஷ, கைவிசேஷம், சத்தியாவின கைரேகை சாஸ்திரம் எல்லா ராசிகளின் பலன்கள் ரூ. 8.50 எங்கும் கிடைக்கும். கனகா ரேட்ஸ் திருநெல்வேலிச்சந்தி. [4682]

## தேவை

வளர்ந்துவரும் உணவகத்திற்கு திறமை மிக்க பெண் ஊழியர்கள் தேவை. திறமைக்கும், அறிவுக்கும் தகைமைக்கு மேற்ற ஊதியம் வழங்கப்படும். நேரில் வாரநாட்களில் காலை 9-00மணி முதல் மாலை 3-00 மணிவரை நற்சாட்சி தகைமைச் சான்றுகளுடன் ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/6426)

## புத்தாண்டு விழா

புத்தாண்டை ஒட்டி நல்லூர் பிரதேச செயலகம், நல்லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் எதிர்வரும் வியாழன் மாலை 4 மணிக்கு புத்தாண்டு விழாவை ஏற்பாடு செய்துள்ளது.


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்

# A/L 95

பொருளியல் - ஞானேஸ்
கணக்கியல் - Sam
வர்த்தகம் - தேவா
அளவையியல் - சோதி
அரசியல் - கியூபேட்
தமிழ் - குழந்தை
புவியியல் - சண்
இ நாகரிகம்) - அருள் நங்கை
இந்துசமயம்)
வரலாறு - நாகராணி
கிறீஸ்தவம் - அருட் சகோதரர்

10-04-93 இல் வகுப்புக்கள் யாவும் ஆரம்பமாகி விட்டன. [சி/6408]



## வெற்றிவேலாயுதம் ஜீவராணி


பிறப்பு 18-?8-1970 | இறப்பு 14-04-1992

ஓடியது ஓராண்டு
ஓயவில்லை உன் நினைவு—நீ
நாடியது விண்ணுறக்கம்
நமக்கில்லை கண்ணுறக்கம்

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. [3422]

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

## 8-ம் ஆண்டு நினைவு



நாட்டில் ஜனனம்
09-07-1963

நாட்டுக்காக அஸ்தமனம்
14-04-1985

## வீரவேங்கை திலீபன்

[பொன்னுத்துரை யோகசிங்கம் (பாப்பா)]

அன்றும் ஒரு புதுவருடப் பிறப்பு
அன்று நீ ஆழி கடந்து செல்ல முற்பட்டாய்
கையிலே விழுப்புண் — அது
யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலால் ஏற்பட்டது
எதிர்கொண்ட கடற்படையுடன்
களப்போர் தொடுத்தாய் ..
எங்கள் கண்மணியே நீ அன்று
கடலுடன் சங்கமித்து விட்டாயே
நாளும் பொழுதும் எழும்
கடலலையைக் கேட்கிறோம்
எங்கள் கண்மணியை கண்டாயா என்று

உன்னுடன் சங்கமித்த அனைத்து வேங்கைகளுக்கும் எங்கள் அஞ்சலிகள்.

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணிமார், அத்தான்,
மருமக்கள் மற்றும்
உற்றார், உறவினர்.

'வசந்த கிரி'
மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி.

(4676)

03-03-1965 | 14-04-1989

விரைந்தோடும் காலக்கடலில்
கரைந்தோடின நான்காண்டுகள்
அஞ்சாத துணிவு உனதாகும்
ஆறாத நீள்துயர் எமதாகும்
பாசமுள்ள மலர்கள் விரைவில் வாடிவிடும்
பாசமுள்ள நல்லவர் நெடுநாள் வாழ்வதில்லை

15-04-1993 நாளை எமது வீட்டில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்,
சகோதரர்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (4680

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் தாடிசிறி

[அரியரட்ணம் சிறீதரன்]

தாயின் மடியில்: 03-01-1859 | வீரச்சாவு: 14-04-1989

வாகாய் ஓடிய வாகனத்தில்
வளரும் பயிர்களை வாழவைக்க
முனைந்த சிறி. அல்பேட், சுபாஸ், கரனை
முத்தமிட்டாள் தாயகத்தாள்
தரணி உய்ய புறப்பட்ட புலி வீரர்களே
தம்பி தலைமையில் தமிழீழம் மலரும்
உங்கள் கனவு நனவாகும்.
விடிவிற்கு வித்தாகி விட்டீர் என்று
விளங்கியே எம்மனதை ஆற்றுகின்றோம்.

குடும்பத்தினர், மச்சான்மார்,
மருமக்கள், உறவினர்,
நண்பர்கள்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

[4620]

லிங்கராசா (சத்தியாஸ் எலியாஸ்-குமாரயங்குளம் அடம்பன்-மன்னார்)

நடேஸ்மாமா (முத்தையா நடராசா-பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

கணேஸ்மாமா (கந்தசாமி கணேசமூர்த்தி - மூர்த்தி வீதி பொலிகண்டி கிழக்கு,-வல்வெட்டித்துறை)

சுதா (முத்துச்சாமி சுதாகர்-பொலிகண்டிகுடியேற்றம்-வல்வெட்டித்துறை)

கமல் (அர்ச்சுனராசா நந்தகுமார்-பொலிகண்டி, ஓடக்கரை-பருத்தித்துறை)

திலீபன் (பொன்னுத்துரை யோகசிங்கம்-வசந்தகிரி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, யாழ்]

தம்பி (வேலுப்பிள்ளை இராசகோபால்-முரளிவீதி, ஆவரங்கால், புத்தூர்-யாழ்)

சண் (தவசி சற்குணராசா-சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி-யாழ்)

1988 ஆம் ஆண்டு கருவேலங்கண்டலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

ராதா (வேலுப்பிள்ளை சிவானந்தன்- பட்டிக்குடியிருப்பு கருவேலங்கண்டல், ஒட்டிசுட்டான்)

1989 ஆம் ஆண்டு யாழ். கந்தர்மடம் ஆலடிச்சந்திப் பகுதியில் இந்தியப்படையினரின் முகாமொன்றினைத் தகர்க்க வெடிமருந்து அடங்கிய வாகனத்தைக்கொண்டு செல்லுகையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த
வலிகாமப்பொறுப்பாளர்,

மேஜர் சுபாஸ் (புண்ணியமூர்த்தி உதயகுமார் நவாலி வடக்கு, மானிப்பாய்-யாழ்)

கப்டன் சிறியண்ணா/தாடிசிறி (முத்துராசா அரியரட்ணம் சிறிதரன் - சண்டிலிப்பாய் வடக்கு - யாழ்)

லெப். கரன்/குட்டி (நல்லையா பாஸ்கரன்-25 பாஸ்கரன் வீதி, பலாலிவீதி, திருநெல்வேலி -தெற்கு-யாழ்)

லெப் அல்பேட் (மருதப்பு ராஜ்குமார்-26/4 மலர் மகள் வீதி, அரியாலை - யாழ்)

முல்லை-விஸ்வமடுப்பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

இளங்கோ (ஆழ்வாப்பிள்ளை ரவீந்திரன்-ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

யாழ்-கந்தர்மடம், ஆலடிச்சந்தி வெடிவிபத்தின்போது சாவடைந்த 06 பொது மக்கள்.

நெல்லியடி-வதிரிச்சந்தியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொல்லப்பட்ட இருதயக்கல்லூரி மாணவத் தலைவனான வல்வெட்டித்துறை-சமரபாகு வாசி
இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கரம்பன் மேற்குப் பகுதி கிராம சேவையாளர்.
1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின போது வீரச்சாவெய்திய

கப்டன் காண்டீபன் (சத்தியாமார்க் அல்பேட்மார்க் 1-ம் வட்டாரம், வங்காலை-மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6408)

சிந்தனைக்கு

ஒரு நாட்டினர் சுதந்திரம் எய்தாதவரை அவர்களது ஆன்மீக ஆக்கம் தொடங்கவே இயலாது.
— ஜேம்ஸ் மார்ட்டினோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சவால்கள் முன்னுள்ள புத்தாண்டு

இன்று தமிழ் புத்தாண்டு தினமாகும். கடந்த பல ஆண்டுகளாக துயர்களை அனுபவித்துவரும் தமிழ் மக்கள் இப்புத்தாண்டு சமாதானமும், சுபீட்சமும் நிறைந்ததாக இருக்க வேண்டும் என எண்ணுவதில் தப்பேதும் இல்லை. ஆனால், இன்று இலங்கையில் நிலவும் அரசியல், இராணுவ சூழ்நிலை இவ்வாண்டும் சாந்தியையும், சமாதானத்தையும் கொண்டு வருமா என்பது சந்தேகத்திற்குரியதே. சிங்களப் பேரினவாதிகள் இனப்பிரச்சினை தொடர்பாகக் கொண்டுள்ள நிலைப்பாடானது ஈழப்போரில் தமிழ் மக்கள் வெற்றி பெறும் வரை சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்பெதையும் கொண்டிருக்கவில்லை என்றே எண்ண வைக்கின்றது.

கடந்த வருடத்தின் முற்பகுதி பெரும் இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளான காலப்பகுதியாகும். எப்பொழுதும் யாழ். குடாநாட்டின் மீது படை எடுத்து குடாநாட்டைக் கைப்பற்றி விடுவோம் எனச் சிறிலங்கா இராணுவத் தலைமை மிரட்டிக் கொண்டிருந்தது. அத்துடன் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டமும் தோற்கடிக்கப்படும் எனக் கற்பனை செய்தது. இதற்கென புதிய தாக்குதல் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. புதிய இராணுவ தளபாடங்கள் கொள்வனவும் செய்யப்பட்டன. இவை யாவற்றிற்கும் மேலாக முப்படைத் தளபதிகளும் முழு அதிகாரத்துடன் தாக்குதலுக்குத் தயாராகியிருந்தனர்.

ஆனால், விளைவு எதிர்மறையாக இருந்தது. சிறிலங்கா இராணுவத் தலைமை எதிர்பாராதவகையில் பல முன்னணித் தளபதிகளை இழந்ததோடு பெரும் எண்ணிக்கையிலான சிப்பாய்களையும் இழந்தது. சிறிலங்கா இராணுவ இயந்திரமே ஆட்டம் காணும் அளவிற்கு நிலைமை மாறியது. ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் இராணுவத்தை விட்டு ஓடினர். பெரும் தளபாட இழப்புக்களையும் இராணுவம் சந்தித்தது. சிங்கள இராணுவத்தினருக்கு புலிகள் பலத்த அடி வழங்கிய ஆண்டாக இருந்தது.

இராணுவத்திற்கு ஏற்பட்ட இவ் இழப்பானது சிங்களப் பேரினவாதிகள் தரப்பில் பெரும் விமர்சனத்திற்கும், விசனத்திற்கும் உள்ளானது. இராணுவத் தலைமைப்பீட அதிகார மாற்றங்களை மீண்டும் ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அதாவது, கடந்த ஆண்டு சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்து இராணுவ ரீதி

# கடற்படை விடுவித்தமீனவர்; தமிழகபொலிஸ் விசாரணை

(சென்னை)

கச்சதீவு கடலில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட 7 தமிழக மீனவர்கள் தமிழக பொலிஸின் 'கியூ' பிரிவினரால் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இந்த மீனவர்கள் கச்சதீவு அருகே சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கடற்படையினர் இவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை சேதப்படுத்தியதுடன் அவர்களது படகுகளையும் குண்டுகளால் தகர்த்தனர்.

இத்தகவலை நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்த இந்த மீனவர்களில் ஒருவர், தாம் கடற்படையினரால் சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்றில் ஒப்படைக்கப்பட்டதாகவும் எனினும் செஞ்சிலுவைச்சங்க தலையீட்டினால் எழுவரும் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இவர்களை தற்போது தமிழக பொலிஸின் கியூ பிரிவினர் விசாரித்து வருகின்றனர்.

# சேர்பியரின் ஷெல் தாக்கிற்கு 56பேர்பலி; 70பேர்காயம்

## விமான பறப்பு தடை பலனளிக்கவில்லை

[சரஜேவோ]

பொஸ்னியா வான்பரப்பின் மீது சேர்பிய தரப்பு போர் விமானங்கள் பறக்க நேட்டோ தடை விதித்ததையடுத்து சேர்பியப் படைகள் பொஸ்னிய முஸ்லிம் கிராமங்கள் மீது கடும் ஷெல் தாக்குதலை ஆரம்பித்துள்ளன. இத்தாக்குதலினால் ஸ்ரபெனிக்கா நகரில் 56 பேர் பலியாகியுள்ளனர். 70 பேர் காயமடைந்துள்ளனர். ஷெல் தாக்குதல் ஆரம்பித்து முதல் நாற்பது நிமிட நேரங்களிலேயே இவர்கள் பலியானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் பொஸ்னியத் தலைநகர் சரஜேவோ மீது நடந்த இருவார ஷெல் தாக்குதலில் 20 பேர் காயமடைந்துள்ளனர். சேர்பியர்கள் கடுமையான ஷெல் தாக்குதலை நடத்திய வண்ணம் முஸ்லிம் கிராமங்களை நோக்கி சேர்பியர்கள் முன்னேறும் இந்நிலையில் சேர்பிய தரப்புடனும், ஐ. நா. தரப்புடனும் சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாது என பொஸ்னிய முஸ்லிம் இராணுவத் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

ஷெல் தாக்குதலில் காயமடைந்தவர்களை ஐ. நா. படையில் பணியாற்றும் கனேடிய இராணுவத்தினர் தமது கவச வாகனங்களில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதாகக் கூறப்படுகின்றது. முன்னதாகச் சேர்பியத் தரப்புப் படைகள் தரைவழித் தாக்குதலை மட்டுமே நடத்திய வண்ணம் முன்னேறியதில் இரு முஸ்லிம் கிராமங்கள் அவர்கள் வசம் வீழ்ந்தன. இங்கும் 15 பொதுமக்கள் பலியாகியுள்ளனர். சேர்பியக் குண்டுவீச்சு விமானங்கள் பறக்க நேட்டோ தடை விதித்துள்ளபோதிலும் அது அங்குள்ள பொஸ்னிய முஸ்லிம்களுக்கு எவ்விதத்திலும் உதவவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதே சமயம் பொஸ்னிய வான்பரப்பில் சேர்பிய போர் விமானங்கள் பறப்பதைத் தடை செய்யும் வகையில் நேட்டோ அமைப்பின் ஆகாய ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பிரெஞ் மிராஜ் போர் விமானம் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக ஏட்றியாட்டிக் கடலில் வீழ்ந்து நொருங்கியது. எனினும் விமானி உலங்குவானூர்திகள் மூலம் காப்பாற்றப்பட்டார். நேட்டோவின் இந்த வான் தடை நடவடிக்கையில் அமெரிக்க, பிரெஞ், ஹொலந்து யுத்த வீமானங்கள் ஈடுபட்டுள்ளமை தெரிந்ததே.

நேட்டோவின் இந்நடவடிக்கையில் ஜேர்மன் தனது ஹவாக்ஸ் ரக ரேடார் கண்காணிப்பு விமானங்களை ஈடுபடுத்தியிருப்பதை ஆட்சேபித்து நேற்று ஜேர்மனிய நகரங்களில் ஜேர்மன் மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

### வன்னிப் பகுதியில்

ஒன்றை 450 ரூபாவுக்கு கொள்வனவு செய்தது தெரிந்ததே. இந்த நடவடிக்கையால், பாவனையாளர்களும், உற்பத்திச் செலவுக்கேற்ற விலை கிடைப்பதால் விவசாயிகளும் நன்மை அடைவார்களென தமிழீழ அரசியல் துறையினர் கூறியுள்ளனர்

### வன்னியில்

மேலாக நடந்துவரும் போரும் அதனை எதிர்கொள்ளலும், தலைவர்களின் நிலைப்பாடும், தொடர்ச்சியான வழிகாட்ட

### கரப்பந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகள் மாவட்ட நிலைக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. இதற்கான போட்டி நிரல்கள் ஏற்கனவே பங்கு பற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

17, 19 வயதுப் பிரிவுகளுக்கு நடக்கும் இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் கோட்ட மட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் மோதவிருக்கின்றன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 13-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9036

## பூபதி செய்திட்ட யாகம்

பாரத தேசம் போர்த்திருந்த
பசுத் தோலது விலகிய தாலே
பாய்ந்தது வேங்கையும் துணிவாய் – ஈரம்
காய்ந்த நெஞ்சினர்க் கெதிராய்

இகமதில் வலியொரு நாடு – அதைப்
பகை கொள்வ தென்பது கேடு
பகர்ந்தவர் வாயடைத் திருக்க-அன்னை
பட்டினி நோன்பிருந் திட்டாள்

திங்களொன் றுணவினை மறந்து–எங்கள்
மண்ணினின் விடிவினை நினைந்து
தென் தமிழீழத்தின் கரையில் – தன்னை
வெதுப்பினள் கொடும் பசித்தீயில்

காந்தி அண்ணல் ஜனித்த – அந்த
இந்தியாவும் திகைத் திருக்க
ஆவி பிரிந்தாள் அன்னை – கொடும்
பாவிகளின் கண் முன்னே

தாயக மீட்பினில் விலையாய்
உயிர் உதிருகின்றதே இலையாய்
தளிருகள் சருகுகள் என்றோர் பேதம்
ஏதேனும் இதில் உண்டோ

அன்னியன் சுவடது மறைய
அன்னை பூபதி செய்திட்ட யாகம்
என்று மிங்கு நிலைத்திருக்கும் – தமிழ்
இனமென் றொன்றுள்ள வரைக்கும்

–வரணீதரன்

# க.பொ.த. (உ.த) பரீட்சை மொத்த புள்ளிவிபரம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரம் 1992 ஆகஸ்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்பெற்ற மொத்தப் புள்ளிகள் நேற்று யாழ். குடாநாட்டில் வெளியிடப்பட்டன.

மேற்படி பரீட்சையில் சில பாடசாலைகள் பெற்ற மொத்தப் புள்ளிகள் வருமாறு:-

### மகாஜனாக் கல்லூரி

**கணித பிரிவு**

வா. தமிழினி-356 (யாழ். மாவட்டத்தில் மிகக்கூடுதலான புள்ளிகளில் 2ஆவது என்பது குறிப்பிடத்தக்கது.)

வை. மஞ்சுளா, 302, தி. பாமினி294, சி. பகீதரன் 288, செந்தில்குமரன் 271, சபேசன் 258, ஜெயகௌரி 240.

**விஞ்ஞானப்பிரிவு**

நா. கலாமதி 259, சி. சிவரதி 252.

**வர்த்தகப்பிரிவு**

ஏ. சாந்தரூபி 297, கி. ஜெகன் 289, பா. முகுந்தன் 288, யு. றூபராஜ் 274, ரங்காதரன் 281, ஞா. ராகினி 268.

**கலைப்பிரிவு**

எ. சிவசுகி 269, கே. முகுந்தன் 268, கி. பகீரதி 260.

### யாழ். இந்துக்கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**

மன் 322, ம. செல்வகுமார் 320, ம. சிறிகரன் 319, வி. ஜதீபன் 316, க. சுந்தரேசன் 312, ம. மயூரதன் 312, யோ. பிரதாபன் 311. சி. சிறிகுமரன் 310, ஆ. அகிலன் 302, ந. மனோரஞ்சன் 302.

**விஞ்ஞானப் பிரிவு**

செ. தெய்வகுமார் 325, கு. உமாசங்கர் 307, வே. ஜெகரூபன் 307, தி. சயந்தன் 290, ச. ராஜசேகரன் 284, ச. வரதன் 270, யோ. தர்மேந்திரா 269, ச. சியாமலன் 267.

### வேம்படி மகளிர் கல்லூரி

மொத்தப் புள்ளி பெற்றோர் 245, தகுதி பெற்றோர் 198,

**விஞ்ஞானம்**

சோமசுந்தரம் பிரசாந்தி 305

**கணிதம்**

நிலானி நவரெட்ணம் 325

**வர்த்தகம்**

சுதா தாமோதரம்பிள்ளை320

**கலை**

சிவலிங்கம் மலர்விழி 273

### இந்துமகளிர் கல்லூரி

மொத்தப் புள்ளி பெற்றோர் 183, தகுதி பெற்றோர் 157.

**விஞ்ஞானம்**

காவேரி கனகராஜா 287

**கணிதம்**

வும் செய்யப்பட்டன. இவை யாவற்றிற்கும் மேலாக முப்படைத் தளபதிகளும் முழு அதிகாரத்துடன் தாக்குதலுக்குத் தயாராகியிருந்தனர்.

ஆனால், விளைவு எதிர்மறையாக இருந்தது. சிறிலங்கா இராணுவத் தலைமை எதிர்பாராதவகையில் பல முன்னணித் தளபதிகளை இழந்ததோடு பெரும் எண்ணிக்கையிலான சிப்பாய்களையும் இழந்தது. சிறிலங்கா இராணுவ இயந்திரமே ஆட்டம் காணும் அளவிற்கு நிலைமை மாறியது. ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் இராணுவத்தை விட்டு ஓடினர். பெரும் தளபாட இழப்புக்களையும் இராணுவம் சந்தித்தது. சிங்கள இராணுவத்தினருக்கு புலிகள் பலத்த அடி வழங்கிய ஆண்டாக இருந்தது.

இராணுவத்திற்கு ஏற்பட்ட இவ் இழப்பானது சிங்களப் பேரினவாதிகள் தரப்பில் பெரும் விமர்சனத்திற்கும், விசனத்திற்கும் உள்ளானது. இராணுவத் தலைமைப்பீட அதிகார மாற்றங்களை மீண்டும் ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அதாவது, கடந்த ஆண்டு சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்து இராணுவ ரீதியில் பேரிடிகளை சந்தித்த ஆண்டாக அமைந்தது. தமிழர்களைப் பொறுத்து இராணுவ ரீதியாக சாதனை ஆண்டாகவும் இருந்தது.

இதேவேளை கடந்த ஆண்டின் இறுதி பொதுவாகவே மந்தமான நிலை காணப்பட்டது. அத்தோடு இராணுவரீதியாக இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை சிங்களப் பேரினவாதம் எப்பொழுதுமே ஏற்படுத்தப் போவதில்லை என்பதை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டும் காலப் பகுதியாகவும் இருந்தது. இனப்பிரச்சினையின் தீர்விற்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இடைக்கால அறிக்கை மூலம் சிங்களப் பேரினவாதிகளின் விருப்பத்தை வெளியிட்டது. அத்தீர்வுத்திட்டம் இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஏணி வைத்தாலும் எட்டாத தூரத்தில் இருந்தது.

தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம் அரசாங்கத்தின் தயவில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ்க் குழுக்களுக்கே ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவை பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்தே வெளியேறும் அளவிற்குத் தெரிவுக் குழுவின் தீர்வுத்திட்டம் வெறும் 'சின்னத்தனமானதாக' இருந்தது.

இவ்வாறாக கடந்த ஆண்டு சிறிலங்கா அரசிற்குப் பெரும்இராணுவ தோல்விகளைக் கொண்ட ஆண்டாக இருந்தவேளை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் எதுவித முன்னேற்றமுமற்ற ஆண்டாகவும் இருந்தது. ஆனால், இதன் பின்னரும் அரசாங்கம் அரசியற்தீர்வு குறித்துச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. போருக்கான முஸ்தீபிலும், இராணுவப் பெருக்கத்திலுமே தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதே சிங்கள அரசின் தாரக மந்திரமாக உள்ளது.

இந்நிலையில் இப்புத்தாண்டிலும் சிங்கள இன்வாத அரசு இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்விற்கான வழியைத் திறக்கும் என எதிர்பார்த்திருக்க முடியாது சிங்கள இராணுவத்தின் சவால்களை தமிழ்மக்கள் எதிர்கொண்டே ஆக வேண்டிய நிலையில் உள்ளனர். ஆகையினால், கடந்த ஆண்டைப் போன்றே சிங்களப் பேரினவாதத்திற்கு பலத்த அடிகளை வழங்கும் ஆண்டாக இதனைத் தமிழர்கள் எதிர் கொள்ள வேண்டும். எமது எதிர்கால சந்ததியின் சுபீட்சத்திற்காக இன்றைய சந்ததி தியாகங்கள் புரிய வேண்டும். புத்தாண்டுகள் காலத்திற்குக்காலம் வந்துபோகலாம். ஆனால், அதனைக் கொண்டாடவும் மகிழவும் சுதந்திரமும், பாதுகாப்பும் முதலில் உறுதியாவது அவசியம்.

குதலில் 20 பேர் காயமடைந்துள்ளனர். சேர்பியர்கள் கடுமையான ஷெல் தாக்குதலை நடத்திய வண்ணம் முஸ்லிம் கிராமங்களை நோக்கி சேர்பியர்கள் முன்னேறும் இந்நிலையில் சேர்பிய தரப்புடனும்,

[illegible] தடை விதித்துள்ளபோதிலும் அது அங்குள்ள பொஸ்னிய முஸ்லிம்களுக்கு எவ்விதத்திலும் உதவவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதே சமயம் பொஸ்னிய

[illegible] ப்பு விமானங்களை ஈடுபடுத்தியிருப்பதை ஆட்சேபித்து நேற்று ஜேர்மனிய நகரங்களில் ஜேர்மன் மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

### வன்னிப் பகுதியில்

ஒன்றை 450 ரூபாவுக்கு கொள்வனவு செய்தது தெரிந்ததே. இந்த நடவடிக்கையால், பாவனையாளர்களும், உற்பத்திச் செலவுக்கேற்ற விலை கிடைப்பதால் விவசாயிகளும் நன்மை அடைவார்களென தமிழீழ அரசியல் துறையினர் கூறியுள்ளனர்

### வன்னியில்

மேலாக நடந்துவரும் போரும் அதனை எதிர்கொள்ளலும், தலைவர்களின் நிலைப்பாடும், தொடர்ச்சியான வழிகாட்டலும், இயக்க வளர்ச்சியும் அதன் தேவையும், போராளிகளின் உழைப்பும் மாவீரர்களின் தியாகமும் என்பன உட்பட பல்வேறு விடயங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. பெருமளவான மக்கள் இக் கலந்துரையாடல்களில்கலந்துகொள்வதாகவும், மீட்புநிதி ஆவலுடையோராக காணப்படுவதாகவும் அங்கிருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன.

### கரப்பந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகள் மாவட்ட நிலைக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. இதற்கான போட்டி நிரல்கள் ஏற்கனவே பங்கு பற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

17, 19 வயதுப் பிரிவுகளுக்கு நடக்கும் இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் கோட்ட மட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் மோதவிருக்கின்றன.

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 13-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9036

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9579, 41-9166, 24-5955, 22 3938, 26-7540.

### பொருள்கள்

வருவது குறிப்பிடத்தக்கது. புத்தாண்டையடுத்து இன்று பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெறமாட்டாதெனவும் அறியமுடிகிறது.

(யோ)

### பொறியியல்

மாணவர்களை அனுமதிப்பதில்எந்ததாமதமும் ஏற்படமாட்டாது என்றும் பேராசிரியர் ஐ. பாலசூரிய மேலும் தெரிவித்தார்.

## சந்தை விலைவிபரம் (12-04-1993)

### சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 33.50 | 30.80 | 32.15 | 30.80 | 31 75 | 36.00 | 32.00 | 32.30 |
| 02. | கோதுமை மா | ,, | 15.50 | 13.50 | 14.00 | 14.80 | 13.00 | 20.00 | 19.60 | 14.50 |
| 03. | சீனி | ,, | 40.50 | 42.30 | 39.60 | 41.30 | 39.00 | 45.00 | 41.30 | 43.00 |
| 04. | கத்தரி | ,, | 28.60 | 31.30 | 27.00 | 25.60 | 21.00 | 28.00 | 32.00 | 28.00 |
| 05. | வெண்டி | ,, | 34.30 | 37.00 | 26.60 | 22.00 | 25.00 | 30.00 | 38.30 | 46.50 |
| 06. | பாகல் | ,, | 24.30 | 42 30 | 43.30 | 35.00 | 40.00 | 30.00 | 35.00 | 33.60 |
| 07. | புடோல் | ,, | 22.30 | 25.30 | 19.30 | 21.30 | 30.00 | — | 22.60 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 26.00 | 36.30 | 20 60 | 31.00 | 21 00 | 30.00 | 36.60 | 32.30 |
| 09. | தக்காளி | ,, | 47 50 | 59.30 | 37.50 | 60.00 | 47.50 | 40 00 | 50.00 | 33.75 |
| 10. | வாழைக்காய் | ,, | 23.00 | 34.00 | 24.60 | 25.00 | 50.00 | 25.00 | 31 00 | 30.00 |
| 11. | பீற்றூட் | ,, | 18.00 | 19.60 | 17.60 | — | 15.00 | 26.00 | 20.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 24.60 | 28.60 | 30.00 | 29.30 | 26.25 | 27.00 | 27.00 | 19.50 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 22.00 | 31.30 | 18.60 | 41.60 | 17.00 | 20.00 | 28.60 | 30.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 175.00 | 196.60 | 140.00 | 165.00 | 145.00 | 120.00 | 148.30 | 150.00 |
| 15. | வெங்காயம் | ,, | 16.50 | 24.15 | 15.60 | 17.00 | 16.75 | 14.00 | 13.00 | 15.15 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 27.50 | 36.00 | 35.00 | 32.00 | 32.50 | 45.00 | 37.50 | — |
| 17. | இறால் | ,, | 100.00 | 87.50 | 93.30 | 61.60 | 37.50 | — | 90.00 | 60.00 |
| 18. | பெரியமீன் | ,, | 190.00 | 138.75 | 83.30 | 113.30 | 110.00 | 100.00 | 121.60 | — |
| 19. | சிறியமீன் | ,, | 180.00 | 73.75 | 120.00 | 65.40 | 90.00 | 50.00 | 41.60 | 30.00 |
| 20. | முட்டை | ஒன்று | 7.75 | 8.30 | 7.60 | — | 8.00 | 8.00 | 8.15 | 7.25 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

கணிதப் பிரிவு

வா. தமிழினி-356 (யாழ். மாவட்டத்தில் மிகக்கூடுதலான புள்ளிகளில் 2ஆவது என்பது குறிப்பிடத்தக்கது.)

வை. மஞ்சுளா, 302, தி. பாமினி294, சி. பகீதரன் 288, செந்தில்குமரன் 271, சபேசன் 258, ஜெயகௌரி 240.

**விஞ்ஞானப்பிரிவு**

நா. கலாமதி 259, சி. சிவரதி 252.

**வர்த்தகப்பிரிவு**

ஏ. சாந்தரூபி 297, கி. ஜெகன் 289, பா. முகுந்தன் 288, யு. றூபராஜ் 274, ரங்காதரன் 281, ஞா. ராகினி 268.

**கலைப்பிரிவு**

எ. சிவசுகி 269, கே. முகுந்தன் 268, கி. பகீரதி 260.

**யாழ். இந்துக்கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

க. கேந்திரன் 323, பொ. பிரபாகரன் 305, சி. அன்ரனி 290, கோ. சிறிஸ்கந்தராசா 287, மு. ஜெயசீலன் 288 அ. சுதன் 285, சி. சிறிவிமலகாந்தன் 272.

**கணிதப்பிரிவு**

ச. சிவகுமார்342, கு. ஞானரஞ்சன் 337, பா. மயூரன் 337, க. நாவுக்கரசு 335, க. பாஸ்கரன் 326, த. கனகலிங்கம் 323, ச. நந்தவர்

ச. ராஜசேகரன் 284, ச. வரதன் 270, யோ. தர்மேந்திரா 269, ச. சியாமலன் 267.

**வேம்படி மகளிர் கல்லூரி**

மொத்தப் புள்ளி பெற்றோர் 245, தகுதி பெற்றோர் 198,

**விஞ்ஞானம்**

சோமசுந்தரம் பிரசாந்தி 305

**கணிதம்**

நிலானி நவரெட்ணம் 325

**வர்த்தகம்**

சுதா தாமோதரம்பிள்ளை320

**கலை**

சிவலிங்கம் மலர்விழி 273

**இந்துமகளிர் கல்லூரி**

மொத்தப் புள்ளி பெற்றோர் 183, தகுதி பெற்றோர் 157.

**விஞ்ஞானம்**

காவேரி கனகராஜா 287

**கணிதம்** 204

**வர்த்தகம்**

நளாயினி பாலச்சந்திரன் 299

**சென் ஜோன்ஸ்**

மொத்தப்புள்ளிபெற்றோர் 71 தகுதி பெற்றோர் 64

**கணிதம்**

லோகேஸ்வரன் சேகரன் 350

**விஞ்ஞானம்**

திருநாவுக்கரசு குமணன் 294

**வர்த்தகம்**

ஆறுமுகம் கணேஸ்குமார் 286

**சென் .பற்றிக்ஸ்**

மொத்தப்புள்ளிபெற்றோர் 79 தகுதி பெற்றோர் 65

**கணிதம்**

யி. யி. சுதர்சன் 302

**விஞ்ஞானம்**

பி பிரதீபன் 277

**வர்த்தகம்**

டபிள்யூ. சில்வெஸ்ரர் 294

**சுண்டிக்குழி மகளிர் கல்லூரி**

விஞ்ஞானம்: துரைசிங்கம் மலர்விழி 305, கணிதம் 280, வர்த்தகம் 340, கலை 285.

**கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

மொத்தப்புள்ளிபெற்றோர் 76 தகுதி பெற்றோர் 58, வர்த்தகம்: ஞானப்பிரகாசம் யூட் கிறேசியன்315, கலை: பொன்னையா விக்கினேஸ்வரன் 291.

**யாழ். மத்திய கல்லூரி**

மொத்தப் புள்ளிகள் பெற்றோர் 52, தகுதி பெற்றோர் 31

**வர்த்தகம்:**

கனகலிங்கம் கிருஷ்ணகுமார் 314

**கணிதம்:**

கணேசலிங்கம் ராஜ்குமார் 305

**விஞ்ஞானம்:**

சிறிலங்கநாதன் விஷ்ணுமோகன் 282.

ஈழநாதம்


## "எவர் விஷன்"

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் ஏனையோர்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த

## "புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்"

- உங்கள் மங்கள நிகழ்வுகளை பலவருட அனுபவம் பெற்றவர்களால் தத்ரூபமாக குறைந்த செலவில்
  - வீடியோ படம் எடுப்பதற்கும்
  - கலர் புகைப்படங்கள் எடுப்பதற்கும்
  - நீங்கள் எடுத்த வீடியோ படங்களில் சிறந்த முறையில் MIXING செய்வதற்கும்
- வீடியோ கமராக்களையும் T. V., டெக் போன்றவற்றையும் உத்தரவாதத்துடன் உடனுக்குடன் விரைவாக திருத்திக்கொள்வதற்கும்,

**"எவர் விஷன்"**

21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6371)



## வாழ்த்துக்கள்

**எமது அன்பு நிறைந்த**

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்னலற்ற ஸ்ரீமுக சித்திரை புத்தாண்டு வந்தனங்கள் உரித்தாகுக.

ஜோ. எகட்டன்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

- நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். (சி-6427)


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

### அன்னை பூபதி நினைவு கருத்தரங்கு

[தொல்புரம்]

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் விசேட கருத்தரங்குகள் நடாத்தப் படவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு அராலி வடக்கு ஐக்கிய சன சமூக நிலையத்திலும், மூளாய் வாணி நிகேதன சனசமூக நிலையதிலும் நாளை வியாழன் இரவு 7.30 மணியளவில் இடம்பெறவுள்ளதென சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. து. வெற்றிச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மேலும் 16ஆம் திகதி வெள்ளி அன்று சுழிபுரம் மத்தி நாவலர் சனசமூக நிலையத்திலும், 17 ஆம் திகதி சனிக்கிழமை பனிப்புலம் பன்னமூலை சனசமூகநிலையத்திலும் இரவு 7.30 மணியளவில் இவ் விசேட கருத்தரங்குகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. [41]

### உண்ணாவிரதம்

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்கள் இணைந்து அன்னை பூபதி நினைவாக எதிர்வரும் 17ஆம் திகதி பருத்தித்துறை கொட்டடி ஆலயத்தில் ஒருநாள் அடையாள உண்ணா விரதத்தை மேற்கொள்ளவுள்ளனர். (யோ)

### ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிறு பிற்பகல் வேலணை ப. நோ. கூ. சங்க மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மக்கள் கடையீல் பொருள் நுகர்வு செய்ய வந்தவர்களால் பொதி ஒன்று தவறவிடப்பட்டு அக்கிளை முகாமையாளரினால் சங்க தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் பெறுமதியான பொருள்கள் இருப்பதால் (உரொக்கம், பவுண்) காரியாலய நேரம் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு சங்கபொதுமுகாமையாளர் வே. செல்லத்துரை தெரிவித்தார். (88)


## முதலாவது பிறந்த தின வாழ்த்து

14-04-1993

செல்வன் த. டினோஷன்



கோப்பாய் மத்தியைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஜெயரஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் டினோஷன் தனது முதலாவது பிறந்த நாளை 14-4-93 இன்று கோப்பாய் வடக்கு காளி கோவிலடியில் இருக்கும் 'மதியகம்' இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பாமார், அம்மம்மாமார், பெரியமாமா, பிரான்ஸ்சில் இருக்கும் சின்னமாமா, குட்டி மாமா, ஜேர்மனியில் இருக்கும் அத்தை, மாமா பேர்லினில் இருக்கும் சித்தப்பா, சித்தி. ஜேர்மனியில் இருக்கும் ஆசைச்சித்தப்பா, சுவிஸ்லாந்தில் இருக்கும் குட்டிச் சித்தப்பா, அத்தைமார், அன்ரிமார், மச்சான் டிலக்சன். மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார். சித்திமார், அண்ணன்மார், தங்கைமார். பூட்டி மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பல்கலையும்பெற்று பல்லாண்டுகாலம்வாழகாளிஅம்பாள் அருள் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

மு. தனபாலசிங்கம்
'மதியகம்'
கோப்பாய்.

[4667]



## எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

பலசரக்கு சாமான்கள், நாளாந்த தினசரிப் பத்திரிகைகள் விற்பனையாளரும், பிறந்த நாள் வாழ்த்துக்கள், திருமண வாழ்த்துக்கள், நினைவஞ்சலிகள் மற்றும் எவ்வகை நிகழ்வுகளையும் ஈழநாதம் பத்திரிகைக்கு விளம்பரம் செய்து கொள்ள

இன்றே நாடுங்கள்:

**செந்தூரன் ரேடர்ஸ்,**

செல்வா வீதி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி, (சி-6419)



யாழ். செஞ்சிலுவைச்சங்க உப தலைவர்
திரு, க. புவனேந்திரன் அவர்களின் படுகொலைக்காக
சிறிலங்கா அரசைக் கண்டித்தும்
சர்வதேச யுத்த விதிமுறைகள் பேணப்படுவதை
உறுதிப்படுத்துமாறு சர்வதேச
செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரியும்
சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்களும்
பணியாளர்களும் நடாத்தும்

## ஆர்ப்பாட்டப் பேரணி

காலம்: 16 04 93 வெள்ளிக்கிழமை காலை 9.00மணி
இடம்: நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றல்

மக்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள வேளையில் அவர்களுக்கான சேவைகளில் ஈடுபட்டு வருகின்ற சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்கள், பணியாளர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சீருடைகள், அடையாள சின்னங்களை அணிந்து பேரணியில் கலந்து கொண்டு எமது அதிருப்தியைத் தெரிவிக்க அணிதிரள்வோம்.

செயலாளர்,
சமூகசேவை அமைப்புக்களின்
தொண்டர்கள் பணியாளர் ஒன்றியம்.

14-04-93
[சி-6430]



அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது

## புதுவருட நல்வாழ்த்துக்கள்!

நீங்கள் விரும்பும் தங்க, வைர நகைகளை
மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள

**வேணி நகை மாளிகை**

இல. 124 [பழைய பஸ் நிலையம்]
பிரதான வீதி, பருத்தித்துறை.

உரிமையாளர்:-
திரு. தங்கவேல் சன்ஸ்

[6415]


## நீங்காத நினைவலைகள்

31-ம் நாள் நினைவஞ்சலியும்

**அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்**



அன்னை மடியில்:
05.03.1973

அலைகடலின் அணைப்பில்
14.03.1993

## எமது அன்பு நிறைந்த

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இன்னலற்ற
ஸ்ரீமுக சித்திரை புத்தாண்டு வந்தனங்கள்
உரித்தாகுக.

ஜோ. எகட்டன்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

❋ நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு
மேலும் சுவையூட்டுகின்றோம். (சி-6427)

---

னர். (யோ)

### ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிறு பிற்பகல் வேலணை ப.நோ.கூ. சங்க மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மக்கள் கடையில் பொருள் நுகர்வு செய்ய வந்தவர்களால் பொதி ஒன்று தவற விடப்பட்டு அக்கிளை முகாமையாளரினால் சங்க தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் பெறுமதியான பொருள்கள் இருப்பதால் (உரொக்கம், பவுண்) காரியாலய நேரம் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு சங்கபொதுமுகாமையாளர் வே. செல்லத்துரை தெரிவித்தார். (88)

---

## எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

பலசரக்கு சாமான்கள், நாளாந்த தினசரிப் பத்திரிகைகள் விற்பனையாளரும், பிறந்த நாள் வாழ்த்துக்கள், திருமண வாழ்த்துக்கள், நினைவஞ்சலிகள் மற்றும் எவ்வகை நிகழ்வுகளையும் ஈழநாதம் பத்திரிகைக்கு விளம்பரம் செய்து கொள்ள

இன்றே நாடுங்கள்:

**செந்தூரன் ரேடர்ஸ்,**

செல்வா வீதி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி, (சி-6419)

---

## நீங்காத நினைவலைகள்

31-ம் நாள் நினைவஞ்சலியும்

### அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



அன்னை மடியில்:
05.03.1973

அலைகடலின் அணைப்பில்
14.03.1993

**மேஜர் சேகர்**

(சுப்பிரமணியம் – ரூபச்சந்திரன்)
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்

தமிழீழம் ஒன்று பிறக்கும் — அது
தரணியில் புகழுறச் சிறக்கும்
செந்தணல் மீதில் நாம் குளிப்போம் — அது
சிதறியே தமிழீழம் சிவக்கும்.

புலியாய்ச் சீறி நீ புரிந்தாய் போர் — போரினில்
படைத்தாய் புதிய காவியம்
எதிரிகள் தலைகளை எண்ணியே வீழ்த்தி — நீ
எங்கணும் புகழ் கமழ்ந்தாய்.

ஈழமண் சிவக்க எதிரிகள் ஓடிட
எம் பணி யாம் தொடர்வோம்.

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

சொந்த இடம்:
வஸ்டன் வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர். (4688)

வளர்ந்த இடம்:
வினோதன் வீதி.
4-ம் கண்டம்,
கற்சிலைமடு.

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப் பிறப்பு: 18-12-68 வீரச்சாவு: 14-04-89

**லெப். கரன் [சூட்டி]**

[நல்லையா பாஸ்கரன்]

எத்தனையோ அதிர்வுகள் இம்மண்ணில், எம் மனங்களில்
அன்றும் ஒரு அதிர்வு மௌனமாக தெரிவித்தது,
நீ மரணித்துப் போனதை!
அத்தனை அதிர்வுகளுக்கும் அர்த்தம் இருக்கும்,
உன் வாழ்வுக்கும், மரணத்துக்கும் கூட!

25, கரன் வீதி, (பலாலி வீதி,) —குடும்பத்தினர்.
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (4684)

---

### உற்பத்தியாளர், வாடிக்கையாளர்களுக்கு

## எமது புதுவருட வாழ்த்துக்கள்

★ **“திராட்சை பாகு”** ★

விரைவில் வெளிவரவுள்ள எமது புதுவருட உற்பத்தி

★ **“பனை வெல்லம்”** ★

மொத்தமாக தேவைப்படுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

★ **“முந்திரிகை பழம்”** ★

இவ்வருடம் கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படுகிறது. உற்பத்தியாளர் உடன் பதிவு செய்து கொள்ளவும்.

★ **ஜாம் போத்தல் தேவை** ★

வெற்றுப் போத்தல் உள்ளவர்கள் தொகை எதிர்பார்க்கும் விலையுடன் தொடர்பு கொள்ளவும், பரிசு இல்லை. ஆனால் நியாயமான விலை வழங்கப்படும்.

★ **வெல்ல உற்பத்தியாளர் தேவை** ★

நவீன முறையில் வெல்ல உற்பத்தி செய்யக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

பனை எமது தேசிய சொத்து. அதனை
பாதுகாத்து பயன் பெறுவோம்.

**வடமராட்சி தெ. ப. பொ.**
**கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி**

திக்கம் வடிசாலை
அல்வாய். [3423]

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பூவிலிங்கம்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பதியின் மகன் பூவிலிங்கம் (பாரதி பதிப்பகம் (A. B. PRINTERS, யாழ்ப்பாணம்) அவர்கள் 13-04-93 அன்று காலமானார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இலிங்கேஸ்வரி (சுவிஸ்), இலிங்கேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவானந் (சுவிஸ்), சிவராஜமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா, அநுஜன், நிரோஜன், அநுஸ்லா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-04-93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் செம்மணி மயானத்தில் நடைபெற்றது.

100, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி இ. பூவிலிங்கம்
[4686]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.